**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.71/2022**
**வழக்கு சாட்சி – அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகதேவன் | ஜாதி | |
| தந்தைபெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2023

**( எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் அரசு வேலையில் வருங்கால வைப்பு நிதி ஆணையராக இருந்து தற்போது ஓய்வு பெற்றிருக்கிறேன். நான் மதுரை வருங்கால வைப்பு நிதி ஆணையர் அலுவலகத்தில் 2007 முதல் 2009 வரை ஆணையராக நிலை 2 ஆக பணிபுரிந்தேன். எங்கள் அலுவலகத்திற்கு உட்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் எங்கள் அலுவலக வரையரைக்கு உட்பட்டது. மேற்படி மாவட்டங்களில் உள்ள 20 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் உற்பத்தி நிறுவனங்கள், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் ஆகியவற்றின் PF திட்டம் அமுல்படுத்தப்படும். எங்களது அலுவலகத்திற்க்கு சுமார் 5 லட்சம் சந்தாதாரர்கள் உள்ளார்கள். மேற்படி நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களுக்கு அவர்கள் வேலையில் இருக்கும்போதும், பணி நிறைவின்போதும் முன்பணமாக, தொழிலாளர்களின் குடும்ப விசேசங்கள், மருத்துவ செலவுகள் மற்றும் வீட்டு மனை வாங்க, வாங்கிய மனையில் வீடு கட்டவும் புதிதாக கட்டப்பட்ட வீட்டை வாங்கவும், பழைய வீட்டை வாங்கவும் முன்பணம் வழங்கப்படும். தேனியல் உள்ள வன்னியாறு எஸ்டேட் கோடு நம்பர் TN 716 அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. அதில் வேலை செய்யும் 93 தொழிலாளர்கள் வீட்டு மனை வாங்குவதற்காக படிவம் 31 மற்றும் அத்துடன் இணைவு ஒன்றையும் பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு கொடுத்தார்கள், மேற்படி விண்ணபத்துடன் விருப்பப்பட்டால் தொழிலாளர்கள் வாங்க இருக்கும் இடத்தின் வில்லங்க சான்றிதழ் Layout approval ஆகியவற்றையும் இணைத்துக்கொடுக்கலாம். மேற்படி 93 தொழிலாளர்களும் பின்வரும் நபர்களிடம் இருந்து 1–சென்றாயன், த/பெ. மாரியப்பன், 2.தர்மராஜ் த/பெ.கணபதி, 3. ராமகிருஷ்ணன், த/பெ.கணபதி, 4. பி.சுடலைமணி, த/பெ.பெருமாள், 5. எஸ்.எஸ்.மைதீன், ஆகியோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வில்லங்க சான்றிதழ்கள், மற்றும் Layout approval ஆகிய ஆவணங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டு எங்களது அலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளனர். விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்து போது ஆவணங்கள் சரியாக இருந்த காரணத்தால் முன்பணம் மேற்படி விண்ணப்பங்களுக்கு ஏற்றவாறு கொடுக்கப்பட்டது. மேற்படி 93 விண்ணப்பங்களும் வெவ்வேறு நேரங்களில் அலுவலகத்திற்கு வந்தது. மீண்டும் மீண்டும் ஆவணங்கள் வந்துகொண்டே இருந்ததால் எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்கள் சரியானதுதானா என்று அறிய எங்களது அலுவலக ஆய்வாளர் மூலம் சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும்

பஞ்சாயத்து அலுவலகங்களில் விசாரணை செய்தோம். மேலே 5 வதாக குறிப்பிடப்பட்ட எஸ்எஸ்.மைதீன் என்பவருக்கு சொந்தமான இடம் தொப்பம்பட்டி ஊராட்சி, மணப்பாறை தாலுகாவில் உள்ளது. மேற்படி இடம் திருச்சி அலுவலக எல்லைக்குள் வருவதால் திருச்சி அலுவலகம் மூலம் விசாரித்தோம். அதற்கு வட்டார வளர்ச்சி அலுவலர், மணப்பாறை பஞ்சாய்த்து ஒன்றியம் தங்களது அலுவலக கடிதத்தின் மூலம் பாலன் என்பவர் பஞ்சாயத்து ஒன்றிய தலைவர் என்பதால் Layout approval copy ல் கையெழுத்து இட்டுள்ளார். மேற்படி பாலன் என்பவர் பஞ்சாயத்து ஒன்றிய தலைவராக இல்லை என்றும் திரு.நல்லு என்பவர் தான் 2001 முதல் 2006 ஆம் ஆண்டு வரை தலைவராக பதிவு வகித்துள்ளார் என்றும், எனவே இந்த வரைபடம் போலியானது என்று அவரது கடிதத்தில் தெரிவித்திருந்தார். மேற்படி ராமகிருஷ்ணன், சுடலைமணி அவர்களுக்கு சொந்தமான மனை இடங்கள் சில்வர்புரம் மற்றும் மீளவிட்டான், தூத்துக்குடி மாவட்டம் என்பதால் திருநெல்வேலி துணை மண்டல ஆணையாளருக்கு எங்களது அலுவலக ஆய்வாளர் மூலமாக விசாரணை செய்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. எங்களது அலுவலக ஆய்வாளரான ஆர்.வி.ராஜன், தூத்துக்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வில்லங்க சான்றிதழை கொடுத்து விசாரித்தபோது மேற்படி வில்லங்க சான்றிதழ்கள் அனைத்தும் போலியானவை என்றும், 13.09.2002 முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டது என்றும், அதனால் மேற்படி வில்லங்க சான்றிதழ்கள் அனைத்தும் பொய்யானது என்று தெரிவித்தார். வில்லங்க சான்றிதழ்களில் பதியப்பட்ட முத்திரைகளுக்கும் அவர்களது அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைகளுக்கும் மாறுபட்டு இருப்பதாகவும், தெரிவித்தார். மீளவிட்டான் கிராமம், சார்பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடிக்கு சென்று விசாரிக்க சொன்னதன் அடிப்படையில் மேற்படி கிராமத்தில் வரும் வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 329/12B, எண்ணைப் கொடுத்து விசாரித்தபோது அலுவலகத்தில் அலுவலக பதிவேட்டில் இருந்த ஆவணங்களில் மேற்படி சர்வே எண்ணில் எந்த நிலமோ, ஆவணமோ இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் சென்றாயன் என்பவருக்கு சொந்தமான இடம் சீப்பாலக்கோட்டை, தேனி மாவட்டத்தில் இருப்பதால் திரு.தனபாலன், ஆய்வாளரை நேரில் சென்று விசாரணை செய்து அறிக்கை கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆய்வாளர் அவர்கள் பஞ்சாயத்து ஒன்றிய தலைவி திருமதி.பாரதி அவர்களை சந்தித்து இந்த வரைபடத்தில் உள்ளது தங்களின் கையெழுத்துதானா என்று விசாரித்தபோது, அது தனது கையெழுத்து இல்லை என்று கூறினார். மேலும் கடந்த 10 வருடங்களாக தலைவர் பதவியில் இருப்பதாகவும், அவருடைய காலத்தில் வரைபட அனுமதி எதுவும் கொடுக்கப்படவில்லை என்றும், மேலும் முன்னால் தலைவர் துரை (எ) லட்சுமணய்யா என்பவரையும் சந்தித்து அவரிடம் வரைபட அனுமதி பற்றி விசாரித்தபோது, மேற்படி ஆவணங்களில் அவருடைய கையெழுத்து இல்லை என்று தெரிவித்தார். மேலும் தர்மராஜ் என்பவருக்கு சொந்தமான நத்தம் கிராமம், கல்லிக்குடி தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள நிலத்தின் வரைபடம் எங்களது ஆய்வாளர் கொண்டு எஸ்.பி.நத்தம் பஞ்சாய்த்து ஒன்றிய தலைவரிடம் காண்பித்து ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து விசாரணை செய்தபோது, தமிழகத்தில் முதன்முறையாக டிசம்பர் மாதம் 1996 ம் ஆண்டு பஞ்சாயத்து ஒன்றிய தேர்தல் நடைபெற்றது என்றும், மேற்படி வரைபடத்தில் உள்ள தேதி தேர்தலுக்கும், முந்தைய தேதியாக இருக்கிறது என்றும், தேர்தலுக்கு முன்பு தலைவர் பதவியில் இல்லை என்பதால் அந்த ஆவணம் பொய்யானது என்று தெரிவித்தார். மேலும் வில்லங்க சான்றிதழிலும், கல்லிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் காண்பித்து விசாரித்தபோது, வில்லங்க சான்றிதழில் உள்ள சான்றிதழை தயாரித்தவர், சரிபார்த்தவர்

மற்றும் சார்பதிவாளர் மூவருமே சான்றிதழில் குறிப்பிட்ட காலத்தில் அந்த அலுவலகத்தில் பணியில் இருக்கவில்லை என்று தெரிவித்தார். மேலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் முத்திரைகள் மெட்டல் சீல் என்றும், வில்லங்க சான்றிதழில் பதிக்கபட்டுள்ள முத்திரைகள் ரப்பர் ஸ்டாம்பு சீல்கள் என்றும், தெரிவித்தார். அதனால் மேற்படி சான்றிதழ்கள் அனைத்தும் போலியானது என்று தெரிவித்தார்கள். மேற்படி விசாரணைகளில் இருந்து வன்னியர் எஸ்டேட் தொழிலாளர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்கள் அனைத்தும், போலியானவை என்று தெரியவந்தது. அதனால் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க வேண்டும் என்பதாலும், மேற்படி மோசடிகளை குறிப்பிட்டு மதுரை காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பப்பட்டது. கண்காணிப்பாளருக்கு ஆவணங்களின் நகல்களுடன் அனுப்பப்பட்டது. அதன்பின்னர் விசாரணையில் அசல் ஆவணங்கள் தேவைப்படுவதாக தேனி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்ததாகவும், அனைத்து அசல் ஆவணங்களையும் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் மனு அசாஆ1. புகார் மனுவுடன் இணைத்து அனுப்பபட்ட Annexure B மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட 19 சீட் கள் அசா.ஆ.2. Annexure C மற்றம் அதனுடன் இணைக்கப்பட்ட 4 சீட்ஸ் அசா.ஆ.3. Annexure D மற்றம் அதனுடன் இணைக்கப்பட்ட 6 சீட்ஸ் அசா.ஆ.4. Annexure E மற்றம் அதனுடன் இணைக்கப்பட்ட 23 சீட்ஸ் அசா.ஆ.5. Annexure F மற்றம் அதனுடன் இணைக்கப்பட்ட 8 சீட்ஸ் அசா.ஆ.6. Annexure G மற்றம் அதனுடன் இணைக்கப்பட்ட 14 சீட்ஸ் அசா.ஆ.7. மேற்கூறிய 93 தொழிலாளர்கள் எங்களது அலுவலகத்தில் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் அசா.ஆ.8. (மொத்தம் தாள்கள் 71). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி சென்றாயனிடம் வீட்டு அடி மனை வாங்குவதற்காக வருங்கால வைப்பு நிதியில் முன்பணம் அனுமதிக்கப்பட்ட போது அந்த தேதியில் நான் பணி புரியவில்லை. அந்த சமயத்தில் பணிபுரிந்த ஆணையாளரையோ மற்ற பணியாளர்களையோ நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முன்பணம் அனுமதிக்கப்பட்ட பின்பு எவ்வளவு நாட்கள் கழித்து நான் அந்த அலுவலகத்திற்கு பணிக்கு வந்தேன் என்றால் 3 ஆண்டுகள் கழித்து வந்தேன். எதிரி சென்றாயனைப் பொறுத்தவரை அவரிடம் இடம் வாங்கிய நபர்கள் யாரும் எங்களது அலுவலகத்தில் வருங்கால வைப்பு நிதியில் முன்பணம் எதுவும் பெறவில்லை என்றும், புகார் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி தனபால் எதிரி சென்றாயனிடம் இடம் வாங்கியதாக கூறப்படும் நபர்களிடம் வன்னியாறு எஸ்டேட் சென்று விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு அவசியம் இல்லை. எதிரி சென்றாயன் கிரய உடன்படிக்கை செய்யும் போது ஒரு layout வரைபடம் கொடுத்தார் என்றும், மேற்படி வரைபடம் போலியானது தான் என்பது எங்களது குற்றச்சாட்டு என்றால் சரிதான். வருங்கால வைப்பு நிதியில் தோட்ட தொழிலாளர்கள் முன்பணம் பெறவேண்டும் என்றால் படிவம் 31 மற்றும் இணைப்பு ஆகியவற்றை பூர்த்தி செய்து கொடுத்தால் போதும் என்றால் சரிதான். மேற்படி இணைப்பில் விண்ணப்பதாரர் என்ன என்ன விபரம் காட்டியிருப்பார் என்றால் சொத்தின் உரிமையாளர், சொத்து எங்கு அமைந்துள்ளது அதன் சர்வே எண், சொத்தின் அளவு ஆகியவை கொடுத்திருந்தால் போதுமானதாகும். முன்பண கடன் விண்ணப்பத்தில் என்ன காரணத்திற்காக முன்பணம் கோருகிறார் என்ற காரணம் குறிக்கபட்டிருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கேட்பு விண்ணப்பங்கள் என்றால் சரிதான். அவை மொத்தம் 71

விண்ணப்பங்கள் உள்ளது. மேற்படி விண்ணப்பங்களில் எதிலாவது வீட்டு மனை கிரயம் பெறுவதற்காக என்று காரணம் கூறப்பட்டுள்ளதா என்றால் மேற்படி விண்ணப்பங்களில் என்ன காரணத்திற்காக முன்பணம் பெறுகிறேன் என்ற காலம் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது. மேற்படி விண்ணப்பங்களில் உள்ள உறுதிமொழிபடிவம் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படுகிறது என்றால் சரிதான். Annexure உடன் எதிரி சென்றாயன் கொடுத்த கிரய உடன்படிக்கை இணைக்கப்பட்டிருக்குமா என்றால் இணைக்கப்பட்டிருக்காது. படிவம் எண் 31 மற்றும் இணைப்பு படிவத்துடன் கிரய உடன்படிக்கை இணைக்கப்பட்டிருக்குமா என்றால இணைக்கப்பட்டிருக்காது. சொத்தின் விபரங்கள் மட்டும் காட்டப்பட்டிருக்கும் . முன்பண அனுமதி வழங்கப்பட்ட உடன் விண்ணப்பதாரர் சமர்ப்பித்திருக்கும் கிரய உடன்படிக்கை மற்றும் அது சம்மந்தமாக ஆவணங்களை திருப்பி அனுப்பிவிடுவோம் என்றால் விண்ணப்பதாரர் சமர்ப்பித்திருந்தால் திருப்பி அனுப்பிவிடுவோம். பயனாளிகள் முன்பணம் கேட்டு விண்ணப்பிக்கும்போது அவர்கள் கிரய உடன்படிக்கை செய்து கொண்ட சொத்து layout செய்யப்பட்டது என்பது குறித்து எங்களுக்கு தகவல் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி சென்றாயனுடன் கிரய உடன்படிக்கை செய்துகொண்ட சொத்து சம்மந்தமாக வில்லங்க சான்றிதழில் சொத்து விபரத்தில் பிளாட் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரி சென்றாயன் உடன் கிரய உடன்படிக்கை செய்துகொண்ட சொத்துக்கு layout செய்யப்படவில்லை என்றும் layout செய்துகொண்டதாக எந்த ஆவணமும் எங்களிடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. எதிரி சென்றாயனிடம் இருந்து எந்த ஒரு layout எங்களுக்கு வராது. பயனாளிகள் தான் கொடுப்பார்கள். இது சம்மந்தமாக பயனாளிகள் யாரையும் எங்கள் அலுவலக ஆய்வாளர் தனபாலன் விசாரித்தாரா என்பது குறித்து நான் அறிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரி சென்றாயன் உடைய கிரய உடன்படிக்கை செய்து கொடுத்ததாகக் கூறப்படும் சொத்திற்குறிய வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரிதான். எங்களது அலுவலகத்தில் பயனாளிகளுக்கு முன்பணம் கொடுக்கும்போது கிரய உடன்படிக்கை சமர்ப்பிக்க அவசியம் இல்லை என்னும் பட்சத்தில் layout plan ம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். ஆவணம் அசா.ஆ.3 Annexure C ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள சீப்பாலக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் வழங்கிய தடையில்லா சான்று ஆவணம் நகல் என்றாலும் அது நகல் எடுத்தபின்பு சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் கையொப்பம் இடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அசா.ஆ.3 Annexure C ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள layout plan நகல் என்றாலும் நகல் எடுக்கப்பட்ட பின்பு சம்மந்தப்பட்ட அதிகாரியால கையொப்பம் செய்யப்பட்டு சீல் இடப்பட்டள்ளது என்றால் சரிதான். மேற்படி தடையில்லா சான்றிதழ் மற்றும் layout plan ஆகியவை பின்னீடு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சீப்பாலக்கோட்டை கிராமம் சர்வே எண் 216/4B 52 Ares நிலம் எதிரி சென்றாயனுக்குப் பாத்தியப்பட்டது என்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நானோ, சாட்சி தனபாலனோ எதிரி சென்றாயனிடம் அவர் செய்து கொடுத்த கிரய உடன்படிக்கை குறித்து கேட்டுத் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரி சென்றாயன் பயனாளிகள் கொடுத்த கிரய உடன்படிக்கைகள் எதிலும் கையெழுத்தோ, கைரேகையோ வைக்கவில்லை என்றால் அது எனக்குத் தெரியாது. கிரய உடன்படிக்கைகளைப் பயன்படுத்தி பயனாளிகள் பயனடைந்துவிட்டார்கள் என்றால் சரிதான். வருங்கால வைப்பு நிதியில் தொகை பயனாளிகளுக்கு சென்றடைந்துவிட்டது என்றாலும், அதனால் யாருக்கும் எந்த பாதகமும் இல்லை என்றால் சரியல்ல, காரணம் மேற்படி தொகை வைப்பு நிதியில் இருந்தால் அதில் எங்களுக்கு வட்டி அதிகமாக

கிடைத்திருக்கும். அதனால் பொதுமக்களுக்கு வருங்கால வைப்பு நிதியில் வட்டி அதிகமாக கொடுத்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். வருங்கால வைப்பு நிதியில் பயனாளிகளுக்கு கேட்ட உடன் கொடுக்கவேண்டும் என்றும், அது கொடுக்காமல் இருந்தால் அதனால லாபம் ஏற்பட்டிருக்கும் என்று கூறுவது சரியல்ல. நாங்கள் எங்களுக்கு தெரிந்த உட்காரணங்களுக்காக பொய் புகார் கொடுத்து அதற்கு ஏற்ப பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை நாங்களே உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கும் எதிரி சென்றாயனுக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.